வே எண்: M. 6311 ★ தோலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.டி

மலர்: 15] சென்னை: தை 6 (20—1—68) சனி ★ வெளியூர்: தை 7 (21—1—68) ஞாயிறு [இதழ்: 183

வெளி நாட்டாருக்கிருக்கும் உணர்வு வடநாட்டாருக்கில்லையே

சென்னை, சன. 20—

"சிறப்பைக் கண்டவிடத்துப் பாராட்டும் பெருங்குணம் இன்று நேற்றல்ல --கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகவே நாம் பெற்றிருக்கிறோம்! இரவீந்தரநாத் தாகூர், பக்கிம் சந்திரர், காண்டேகர் ஆகியோரெல்லாம் நம் பாராட்டைப் பெற்றவர்கள்!

இதே அளவுக்கு வடக்கேயுள்ளவர்கள் நம்முடைய எழுத்தாளர்களைப் பற்றி – சிந்தனையாளர்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை!

ஒருசமயம் நான், மாலிலங்கள் அவையில் பேசுகையில் 'உங்கள் ஊரில் ஏதேனும் ஒரு சதுக்கமாகிலும், பெரிடக்கூடிய அளவுக்கும் தென்னுட்டவர் பெயர் ஒன்று கூட உங்கள் நினைவுக்கு வரவில்லையா' என்று கேட்டேன்; 'எங்கள் தென்னகத்துக்கு நீங்கள் வந்தால், இராஜாஜி பூங்காவிலே நுழைந்தால் காந்தியார் சிலையைப் பார்த்துவிட்டு, லஜபதிராய் வாசகசாலையினுள் நுழைந்து மோதிலால் நேருவின் நூல்ப் படிப்பீர்கள்' என்று தெரிவித்தேன்; 'இது எங்கள் நில்ல; இந்த நில்ல உங்களுக்கு இல்லையே' என்று சொன்னேன்.

இதையும், நான் கோரிய தனி நாடு பிரிவினைக்கு என்று நான் சொல்லுகின்ற ஒன்றுக அவர்கள் கினைத்துக்கொண்டார்கள்! இத்தகைய நிலைமைகளால் தான் பிரிவினை எண்ணமே ஏற்படுகிறது என்பதை அவர்கள் உணரவில்லை! 'பரிதாபப்படுகிறேன்; என் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று அவர்களிடம் சொன்னேன்!

ஆனல், எங்கோ நெடுந்தூரத்தில் இருக்கும் சோவியத நாட்டார், நம் எழுத்தாளர்களைப் பாராட்டுகின்றனர்! அவர்களைக்காட்டிலும் அருகேயுள்ளவர்களுக்கு (வடநாட்டாருக்கு) அந்த நெருக்கம் ஏற்படவில்லை!"

---முதலமைச்சர் அண்ணு

('சோவியத் நாடு' இதழின் 20-வது ஆண்டுவிழா நிகழ்ச்சியில்)

'பத்மபூஷன்' விருது படும்பாடு!

திரைப்படத் தயாரிப்பாளர் ஏற்க மறுப்பு

புதுடில்லி, சன. 20—

புகழ்பெற்ற இந்தியப் படத் தயாரிப்பாளரான திரு. வி. சாந்தாராமுக்கு 'பத்மபூஷன்' என்ற விருதை அளிக்க இந்திய அரசு முன்வந்தது; ஆனல் அதனை ஏற்க சாந்தாராம் மறுத்துவிட்டார் என்று தெரிகிறது.

"காலங்கடந்து எனக்கு இந்த விருதை அளிக்க இந்திய அசாங்கம் முன்வந்துள்ளது; என்னைக்காட்டிலும் தகுதியிலும் திறமையிலும் குறைந்த பலருக்கு இதற்கு முன்பே இந்த விருது வழங்கப்பட்டுவிட்டது; எனவே, இவ்வளவு தாமதமாக எனக்கு அளிக்கப்படும் விருதை நான் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை"என்ற காரணம் காட்டி அவர் ஏற்க மறுத்துவட்டதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே ஆங்கிலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தி வெறியர்களான சிலர், தங்களுக்கு இந்திய அரசு வழங்கிய இத்தகைய விருதுகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டது நினைவிருக்கலாம்.

மதுரையில் காங்கிரசுக் குண்டர் வெறியாட்டம்!

பொங்கல்விழாக் கொண்டாடிய கழகத் தோழரைத் தாக்கினர்

மதுரை நகர் 8-வது வட்டாரத்தைச் சேர்ந்த புட்டுத் தோப்பு தாழ்த்தப்பட்டோர் காலனியில், பொங்கல் விழாவையொட்டி கழகத் தோழர் இராசு என்பவர், கழகக் கொடியைக் காலை 11-மணியளவில் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து எம். எல். ஏ. அவர்களைக் கொண்டு ஏற்றிவைத்தார்.

இதைப் பொறுக்கமுடியாத காங்கிரசுக் காலிகள் சிலர், தோழர் இராசுவைத் தாக்கிப் படுகாயப்படுத்தியதுடன், 'நீதானேடா முத்துவைக் கொண்டுவந்து கொடியேற்றியவன்? உன்னை இப்போதே காப்பாற்ற யார் வருவார்கள்? இதோ உன்னை செய்கிறோம் பார்' என்று சொல்லிக் கொண்டே அடித்தும் தாக்கியுள்ளனர்.

தோழர் இராசுவின் வீட்டில் பொறிக்கப்பட்டிருந்த உதயசூரியன் சின்னத்தையும், சுழக்கு கொடியையும் அழித்திருக்கிறார்கள்.

செயிதியறிந்த வட்டத் தோழர்கள், தாக்கப்பட்ட தோழருக்கு முதலுதவி அளித்து மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று உதவி புரிந்தனர்.

குடியரசு -- சுதந்தர நாள் ஒளி அலங்காரம்

மின்சாரக் கட்டணச் சலுகை கிடைக்கும்

சென்னை, சன. 20—

சனவரி 28-ஆம் நாள் குடியரசுத் திருநாளொட்டியும், ஆக. 15—சுதந்தர நாளொட்டியும் சென்னை நகரில் கட்டிடங்களில் மின் விளக்கு ஒளி அலங்காரம் செய்ய வணிகர்களேயும், பொது மக்களேயும் ஊக்குவிக்கும்வகையில், இத்தலைய சிறப்பு ஒளி அலங்காரங்களுக்கு மின்சாரத் தனிக் கட்டணங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

சலுகை கோரி மனுக்கள் வந்தால் உடனடியாகக் கவனிக்கு மாறு தொடர்புடைய அதிகாரிகளுக்கு, ஆணேன் பிறக்கப்பட்டுள்ளது.

யூகோவில் இணைப்பு மொழி இல்லை

அவரவர் தாய் மொழியிலேயே மத்திய அரசுடன் தொடர்பு

புதுடில்லி, சன. 20—

"யூகோஸ்லேவியாவில் ஆறு குடியரசுகளும், ஐந்து ஆட்சிப் பகுதிகளும் உள்ளன; மூன்று சமயங்களே மக்கள் பின்பற்றுகின்றனர்; எனினும், அங்கே இணைப்பு மொழி என்றே—கூட்டாட்சி மொழி என்றே எதுவும் இல்லை"

என்று, யூகோஸ்லேவியாவிலிருந்து இங்கு வந்துள்ள அந்த நாட்டின் கல்வி—பண்பாட்டுத் துறைச் செயலாளரான திருமோமார்டலவ் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் கூறியதாவது:—

குடியரசுகள் அனைத்தும், தங்களின் மொழிகளிலேயேதம் நிய கூட்டாட்சியுடன் தொடர்பு கொள்கின்றன.

யூகோஸ்லே பரந்த அளவில் புரிந்து கொள்ளக்கூடிய மொழி செர்போ—குரோசியன் என்ற மொழியாகும். இரானுவ கிளர்வாக மொழியும் இதுவேயாகும்.

ஆனே தலைநகரான பல்கிரேடில் மும்மொழிப் பயன்பாடு லவுகிறது. பள்ளிகளிலும், ன்று மொழிகள் கற்பிக்கப்டுகின்றன. ஐந்தாவது வகுப்பில் வெளிநாட்டு மொழி ஒன்றை—பொதுவாக ஆங்கிலத்தை—கற்கவேண்டும்; சில ஆண்டுகளுக்குப் பின் மற்றொரு அந்திய மொழியைக் கற்க வேண்டும். செர்போ குரோசியன் மொழியையும் மாணவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஒரு திட்டம்!

நிஜலிங்கப்பாவின் தயாரிப்பாம்!

புதுடில்லி, சன. 20—

பதவியிலுள்ள காங்கிரசுத் தலேவர்கள், தங்கள் பொறுப்புக்களிலிருந்து விலகிக் கட்சியைப் பலப்படுத்தும் பணியை மேற்கொள்ள முன்பு 'காமராசர் திட்டம்' வகுக்கப்பட்டது அல்லவா? அதையடுத்து இப்போது 'நிஜலிங்கப்பா திட்டம்' தீட்டப்பட்டு வருகிறது!

காங்கிரசுக் கட்சியினரிடையே ஒற்றுமையைத் தோற்றுவிக்கவும், அதன் பயனுக காங்கிரசு அல்லாத கூட்டணி அமைச்சரவைகளைக் கலிழ்க்கவும் வழிசெய்யும் வகையில், 'நிஜலிங்கப்பா திட்டம்' உருவாகிவருவதாகக் கூறப்படுகிறது.

ஆங்காங்குள்ள வட்டாரக் காங்கிரசுக் கட்சித் தலேவர்களுக்கு இத்தகையில் அதிகச் சுதந்தரம் வழங்க இந்தத் திட்டம் உதவி செய்யும்.

இந்திரா காந்திக்குப் புதிய மாளிகை!

இரண்டாண்டுகளாகத் தேடிக் கண்டுபிடிப்பு!

புதுடில்லி, சன. 20—

இரண்டு ஆண்டுக்காலம் இடைவிடாமல் தேடியதற்குப் பிறகு தலேமையமைச்சருக்குப் புதிய வீடு கிடைத்திருக்கிறதாம்!

புதுடில்லியில் மான்சிங் சாலேயில் உள்ள தர்பங்கா மாளிகை தலேமையமைச்சருக்கு உரிய வீடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வீடு போதிய அளவுக்கு பாதுகாப்பாக இருப்பதாகப் போலீசாரும் திருப்தி தெரிவித்திருக்கின்றனர். தலேமையமைச்சர் நந்ரோது சப்தார் ஜங் சாலேயில் வசித்து வருகிறார்; அவர் தற்சமயம் வசித்துவரும் வீட்டில் ஒரு தலேமையமைச்சரின் தேவைகளுக்குப் போதுமான வசதிகள் இல்லே யாம்!

இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தர்பங்கா மாளிகை, இந்திரா காந்திக்கு மட்டுமன்றி, எதிர்காலத் தலேமையமைச்சருக்கும் உரிய வீடாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது.

வடக்கத்திப் பட்டதாரி மாணவர்களின் பண்பற்ற செயல்

பட்டமளிப்பு விழாவில் அமளி --- கல்விச்சு

ஜபல்பூர், சன. 19—

ஜபல்பூர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நடந்தபோது, பொறியியல் பட்டதாரிகள், 'எங்களுக்கு வேலே கொடுங்கள்; இல்லேயேல், பொறியியல் கல்வியை நிறுத்திவிடுங்கள்' என்று முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பட்டமளிப்பு விழாவில், பொறியியல் பட்டதாரிகள் பட்டம் பெறும் முறை வந்தபோது, அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தைத் துவக்கினர்; இதன் காரணமாக விழா, அரைமணி நேரம் தடைப்பட்டது.

பொறியியல் பட்டதாரிகள் மேடையை நோக்கி ஓடினர்; பல்கலைக்கழக வேந்தரும் மத்தியப் பிரதேச ஆளுநருமான திரு. கே. சி. ரெட்டி, மேடையைவிட்டு இறங்கிவந்து, மாணவர்களே அமைதியாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

துவக்கத்தில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் டாக்டர் இராம சுபாக் சிங், பட்டமளிப்பு விழாப் பேருரையை ஆற்றிக்கொண்டிருக்கையில், பந்தலுக்கு வெளியே சிலர் மாணவர்களை, 'எங்களுக்குச் சொற்பொழிவு வேண்டாம்; வேலே தான் தேவை' என்று முழக்கமிட்டனர்.

திரு. இராம் சுபாக் சிங் தமது உரையை முடித்துக்கொண்டு விழாப் பந்தலிலிட்டு வெளியேறுகையில், சிலர் கற்கள் வீசினராம். அவருடைய கார் கல்லடிக்குள்ளாகி, கண்ணுடிகள் உடைந்தன; யாரும் காயமடையவில்லே.

டில்லி மாநகராட்சியில் இந்தித் திணிப்பு!

உறுப்பினர் யோசனேக்கு தலேவர் எதிர்ப்பு

புதுடில்லி, சன. 16—

புதுடில்லி மாநகராட்சி மன்றத்தில், 'வருங்கு குடியரசு நாளிலிருந்து இந்நிலில் அலுவல்களேக் கவலிக்க வேண்டும்' என்று ஒர் உறுப்பினர் கொண்டுவந்த தீர்மானத்தை மாநகராட்சித் தலேவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

மாநகராட்சித் தலேவர் திரு. சி. எஸ். சாஸ்ரா, 'மொழிப் பிரச்சினே குறித்து வாக்வர் குழுவின் அறிக்கை கிடைக்கும்வரை காத்திருப்போம்' என்று கருத்தறிவித்தார்.

திரு. இராம்பாஜ் என்னும் உறுப்பினர், 'ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளேயும் மாகராட்சியில் பயன்படுத்தவுதால், வெளியில் உள்ள பெயர்ப் பலகைகளேயும் இரண்டு மொழிகளிலும் எழுத வேண்டும்' என்றார்.

அதற்குத் தலேவர் பதிலளிக்கையில், 'நகராட்சி என்ற முறையில் நாம், நகர மக்களின் நலனிலேயே காட்டம் செலுத்துவதை விடுத்து, மொழிப் பிரச்சினேயில் இறங்கி ரேத்தை வீணுக்கக்கூடாது என்று கூறினர்.

டில்லி அரசின் காலங்கடந்த ஞானோதயம்!

மாநிலங்களுக்கு இராணுவம் அனுப்புவது பற்றிப் புதிய விதிமுறை!

புதுடில்லி, சன. 20—

"தவிர்க்கமுடியாத நேரங்களில் தான் மாநில அரசுகள், இராணுவத்தின் உதவியை நாடவேண்டும்; எடுத்ததற்கெல்லாம் இராணுவத்தை அழைத்துவிடக் கூடாது" என்று மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அறிவித்திருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது.

எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் இராணுவம் அழைக்கப்பட வேண்டுமென்ற விதி முறையை மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனுப்பியிருப்பதாகவும், அந்த விதி முறைகளை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டுமென்று மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பல்வேறு மாநிலங்களில் இராணுவம் அடிக்கடி அழைக்கப்படுவது குறித்துப் பாதுகாப்பு அமைச்சகம், உள்துறை அமைச்சிடம் புகார் கூறியதன் விளைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

"எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இராணுவத்தை அழைத்து எளிதில் சமாளித்துவிடும் மனப்போக்கை மாநில அரசுகள் கைவிட வேண்டும் என்று மத்திய அரசு கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறது.

"மாநில அரசோ அல்லது கவர்னரோ இனி இராணுவத்தை அழைக்கத் தேவையில்லை; உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனைக்கிணங்கவே இனிமேல் இராணுவம் அனுப்பப்படும்" என்றும் அது தெரிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில்தான் பெருமளவுக்கு இராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது; இதுவரையில் 28 தடவைகள் மேற்கு வங்கத்தில் இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

பீகாரிலும், உத்தரப்பிரதேசத்திலும் சுமார் ஆறு தடவைகள் இராணுவம் அழைக்கப்பட்டது.

புதுடில்லியிலும் மூன்று தடவைகள் இராணுவம் அழைக்கப்பட்டது.

1965-ல் தமிழ்நாட்டிலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பக்தவத்சலம் ஆட்சியால் இராணுவம் அழைக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

'வருவாய்க் குறைவு என்பது சரியல்ல'

காரைக்கால் இரயில் பாதையை எடுப்பதற்கு எதிர்ப்பு

காரைக்கால், சன. 19—

வருமானக் குறைவு காரணமாகக் காரைக்கால் — பேரளம் இரயில் பாதையை எடுத்துவிட வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, புதுவை கவர்னர், முதலமைச்சர், இரயில்வே போர்டு ஆகியோருக்கு காரைக்கால் வர்த்தகக் கழகம் எழுதியிருக்கிறது.

இப்பாதையில் மூன்றும் வகுப்புப் பெட்டிகளைக் கொண்ட இரயில் தான் ஓடுகிறது என்றும், ஏழை எளியவர்களுக்கு இந்தச் சிறிய வசதியைக்கூட மறுப்பது நியாயமாகாது என்றும் வர்த்தகக் கழகம் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"ஆண்டுதோறும் இந்த இரயில் பாதையில் பயணம் செல்லும் பிரயாணிகளிடமிருந்து ரூ. 1,50,000-மும், பொருள்களை அனுப்புவதன் மூலம் ரூ. 8,50,000-மும் கிடைக்கிறது; எனவே, 'வருமானக் குறைவு' என்ற காரணம் காட்டி இப்பாதையை எடுத்துவிடுவதில் பொருளில்லை"

என்றும், அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அடையாற்றில் புதிய பாலம்!

ரூ. 50 இலட்சம் செலவில் கட்டப்படும்

சென்னை, சன. 19—

அடையாற்றிலுள்ள 'எல்பின்ஸ்டன்' பாலத்தை அடுத்து இன்னொரு பாலம் அமைக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பாலம் அமைக்கும் பணிகளை ஆராயத் தமிழக அரசு ரூ 5,000 வழங்கியிருக்கிறது.

இப்போதுள்ள பாலத்தில் எல்லா வகையான பழுதுபார்க்கும் வேலைகளும் முடிவடைந்துவிட்டன.

புதிய பாலம் கட்டும் வேலை, 1971—72-ல் முடிவடையும்; இப்பாலம் அமைக்க ரூ. 50 இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இது தவிர, நுங்கம்பாக்கத்தில் உள்ள மற்றொரு பாலத்தை 35 அடியிலிருந்து 60 அடியாக விரிவுபடுத்தவிருக்கின்றனர்.

சைதாப்பேட்டையிலுள்ள 'மர்மலாங்' பாலத்தைப்போல் இன்னொரு பாலமும் அமைக்கப்படவிருக்கிறது.

கண்ணம்மாபேட்டை சுரங்கப் பாதை

அரசு மானியமும் கடனும்

சென்னை, சன. 19—

தியாகராயநகர் அருகிலுள்ள கண்ணம்மாபேட்டையில் சுரங்கப் பாதையை அமைக்கத் தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்கு ரூ. 50,000 கடனாகவும், ரூ 5,000 மானியமாகவும் வழங்கியிருக்கிறது.

இரயில்வே நிர்வாகம் கட்டவிருக்கிற ஒரு பகுதிக்கான செலவு போக மீதமுள்ள பகுதியைக் கட்டி முடிக்க ரூ. 2.5 இலட்சம் கெலவாகும் என்று முன்பு மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கணக்குக் காட்டாத தொழிற்சங்கங்கள்!

பதிவுப் பட்டியலிலிருந்து நீக்கம்

ஜெய்ப்பூர், சன. 18—

இராஜஸ்தான் மாநிலத்தில் செயல்பட்டுவரும் தொழிற்சங்கங்களில் ஏறக்குறைய 50 சதவிகிதத் தொழிற் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட பட்டியலிலிருந்து அகற்றப்பட்டுவிட்டன.

மாநிலத்தில் மொத்தம் 561 தொழிற் சங்கங்களுக்கு அவற்றை ரத்து செய்யப்போவதாக மாநிலத் தொழிற் சங்கப் பதிவாளர் எச்சரிக்கை செய்திருந்தார்; அவற்றுள் 374 தொழிற்சங்கங்கள் இப்போது ரத்து செய்யப்பட்டுவிட்டன.

தொழிற் சங்கங்கள் தங்கள் கணக்குகளைக் காட்டத் தவறியதே இதற்குக் காரணமாகும்.

இராஜஸ்தானில் ஏராளமான தொழிற் சங்கங்கள் ஒரேசமயத்தில் ரத்து செய்யப்படுவது இது தான் முதல் தடவையாகும். இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன் மாநிலத்தில் மொத்தம் 755 தொழிற் சங்கங்கள் செயலாற்றி வந்தன.

ஷேக் அப்துல்லா சென்னை வருகிறார்

இராஜாஜியைச் சந்திக்கத் திட்டம்

புதுடில்லி, சன. 20—

காஷ்மீர் சிக்கலைத் தீர்க்க வழிகாணும் வகையில் இராஜாஜியைச் சந்தித்துப் பேச ஷேக் அப்துல்லா முடிவு செய்திருக்கிறார். இராஜாஜியைச் சந்திக்க அவர் அடுத்த மாதம் சென்னை வருவார்.

இம்மாதம் 24-ம் நாள் ஆச்சாரிய வினோபா பாவேயைச் சந்திக்க ஷேக் அப்துல்லா பாட்னாவுக்குச் செல்லவிருக்கிறார்.

தலைநகரிலுள்ள சோவியத் தூதரையும், வேறு சில வெளிநாட்டு தூதுவர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையில், பாகிஸ்தான் தூதுவர் மூலம் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானிடமிருந்து அவருக்குச் செய்தி வந்திருப்பதாகத் தெரிகிறது.

விண்ணிலிருந்து மண்ணுக்கு...!

இந்தியக் கிராமங்களின் பின்னடைந்த நிலையினைக் கண்டு வியந்தபடி பஞ்சாப் மாநிலத்தின் உட்பகுதி ஒன்றில் சுற்றுப் பயணம் வந்த அமெரிக்க உல்லாசப் பயணி ஒருவர், அங்கே இருந்த முதியவர் ஒருவரைப் பார்த்து, 'ஏன் இந்த விண் யுகத்தில் இந்தியா மட்டும், கட்டை வண்டி காலத்திய சூழ்நிலையிலேயே இருக்கிறது?' எனக் கேட்டாராம்!

சற்று யோசித்துவிட்டு, அதற்குப் பின்னரும், பதிலென்ன சொல்லுவது எனத் தெரியாது விழித்த அந்தப் பஞ்சாப் மாநிலத்துக் கிராமவாசிக்கு, தற்செயலாக அப்போது மேலே பறந்துகொண்டிருந்த ஆகாய விமானம் ஒன்று 'கைகொடுத்து' உதவியது; 'அதோ, உயரே பாருங்கள்—இந்தியாவைப் பற்றிய உங்கள் கேள்வியே தவறு' என்று பதில் கூறி தப்பித்தாராம், அந்தத் தள்ளாத கிழவர்!

சொந்த நாடு திரும்பிய பின்னரும் அந்த அமெரிக்கர், பஞ்சாப் பெரியவரின் சாதுரியமான பதிலை வியந்து பாராட்டி, துண்டுப் பிரசுரம் ஒன்றையே அச்சிட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்!

பஞ்சாப் மாநிலத்துக் கிராமவாசியின் புத்திக் கூர்மை, 'இந்தியாவின் ஏர் லைன்' நிறுவனத்துக்கு ஒரு பெருமிதமான விளம்பரச் சாதனம் என்பதில் ஐயமில்லை!

'இது, விஞ்ஞான யுகம் மட்டுமல்ல—விண் யுகமும்கூட' என்பதனை, பழைமையில்—போதிய பொது அறிவு இல்லாமையில் கிடந்து உழன்று கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான இந்தியாவின் கிராமங்களை, அன்றாடம் ஒரு சில விநாடிகளேனும் உலக முன்னேற்றத்துடன் ஒன்றுபடுத்தும் ஒரு சாதனம் உண்டென்றால், அது, ஆகாய விமானம் ஒன்றுமட்டும்தான்!

இந்த வகையில், இந்திய அரசினரின் பொதுத் துறை நிறுவனமான 'இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பரேஷன்', விண்ணிலிருந்து சில உண்மைகளை, வண்ணக் கலவைகளில்—அசைந்து உருளும் அச்சுக்களில் வழித்தெடுத்து மண்ணுலகுக்குக் கொண்டுவந்து, அதனை ஒரு அரங்கமாக—நாளை சென்னையில் துவங்க இருக்கும் தொழிற் கண்காட்சியில் இடம் பெறச் செய்திருக்கிறது!

மேற்கே காபூல் முதல் கிழக்கே இரங்கூன் வரையில்—வடக்கே காட்மண்டுவிலிருந்து தெற்கே கொழும்புவரையிலுள்ள 63 நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு 24,000 மைல் தூரமும், நிமிடம் ஒன்றுக்கு மூன்று விமானங்கள் தரையிலிருந்து உயரே எழும்பிக் கொண்டுவரும் — ஆண்டொன்றுக்குப் பதினைந்து இலட்சம் பயணிகள் பயன்படுத்திவரும் 'இந்தியன் ஏர் லைன்' நிறுவனத்தின் அரங்கம், சென்னைத் தொழிற் கண்காட்சியில் சுருங்கிக் கிடந்து, 'விருந்து' படைப்பதாக இருக்கிறது!

'உள்ளே கண்காட்சியைப் பார்த்து முடிப்பவர்கள்—வியப்பினைத் தெரிவிக்க—அண்ணாந்து விண்ணைத்தான் பார்க்க வேண்டும்' எனக் கூறுவதுபோல, கண்காட்சியின் முக்கிய நுழைவு வாயிலின்வலதுபுறத்தில்முதலில் நம் கண்ணுக்குத் தெரிவது, 'இந்தியன் ஏர் லைன்' நிறுவனத்தாரின் அரங்கம்தான்!

"விமானத்தைப் பார்க்காதவர்கள் இருக்கமுடியாது; ஆனால், விமானத்தில் பயணம் செய்யாதவர்கள் ஏராளமானோர் இருக்கக் கூடும்" என எண்ணியதனால் தானோ என்னவோ—'மாதிரி சவாரி'க்கான இருக்கை ஒன்றினையும்—பெரிய புகைப்படத்தினைப் பின்னணியாகக் கொண்டு — அமைத்திருக்கின்றனர்!

1,500 நட்சத்திரங்கள் 'கண் சிமிட்ட'—இரவு நேரத்தில் 'காரவில்' விமானம் ஒன்று வானில் செல்லுவதைப் போன்ற காட்சி ஒன்றினையும் 'மாதிரி'யாக வடித்து உருவாக்கியிருக்கின்றனர்!

தரையிலிருந்து விமானம் பறப்பதனைப் பார்க்க நேரிடும்போது ஏற்படும் பார்வை மயக்கம் — கண் அயர்வு எப்படி இருக்கும் என்பதனை உணர்த்துவதுபோல் இருக்கிறது — மின்சாரத்தின் துணையுடன் சுற்றிக்கொண்டிருக்கும் கோடுகள் பொருந்திய பெரிய வட்ட அமைப்பு ஒன்று!

அரங்கத்தினுள் நுழையும்போதே 'இந்தியன் ஏர் லைன்ஸ்' என்ற வார்த்தைகளுக்கான ஆங்கில முதலெழுத்துக்கள் — ஐ. ஏ. ஆகியவற்றைக்கொண்ட புதிய இலச்சினுக்கு பத்திரிகையாளர்களுக்குத் தரப்பட்ட விளக்கம் முற்றிலும் சரியே என்பதனை மெய்ப்பிக்கும் வகையில்— 'விரைவு, தொழில் நுட்பம்' ஆகிய இரு அடிப்படைகளை விளக்கும் வகையில் இருக்கிறது, உள்ளே இருக்கும் பட விளக்கங்கள்!

'இந்தியன் ஏர் லைன்ஸ்', வெளிநாடுகளுக்குச் செல்கிறதா—வருமான வரி கட்டுகிறதா—வாடகைக்கு விமானங்கள் தருகிறதா—சலுகை அடிப்படையில் கட்டணம் உண்டா—என்பன போன்ற கேள்விகளும், அதற்குரிய பதில்களும் அடங்கிய 'க்விஸ்' விளக்கம், அரங்கத்தில், சிறப்பான கவனத்தைப் பெறுகிறது!

அரங்கத்தின் அமைப்பின்மீது கூர்மையான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது — முற்றிலும் கண்ணாடிச் சுற்றுப்புறம்; 50 அடி முற்றம்—60 அடி உயரம் கொண்ட இந்த அமைப்பு, 'வண்ணங்கள்' — 'இயங்கும் வசதிகள்' ஆகிய இரண்டின் அடிப்படைகளில் நிர்மாணிக்கப்பட்டது என அதிகாரிகள் விளக்கினர். அண்மையில் கனடாவில் நடைபெற்ற 'எக்ஸ்போ 1967' உலகக் கண்காட்சியின் அரங்குகளில் கடைபிடிக்கப்பட்ட முறை இது— எனக் கூறப்படுகிறது.

விமானத்தைப் பற்றிய விவரங்களே தெரியாமல், அதில் ஏறி, 'வெளிநாடுகள் பலவற்றிற்குப் போகமாட்டோமா' என ஏர்கும் உள்ளத்தினருக்கும், கண்டங்கள் பல சுற்றிவந்த பின்னரும் உள்நாட்டு விமான போக்குவரத்தினைப்பற்றிய விவரங்கள் தெரியாதோருக்கும், மற்றும் ஏனைய வகையினருக்கும் கருத்து விருந்துடன் கண் விருந்தும் படைக்கிறது 'இந்தியன் ஏர் லைன்ஸ்' அரங்கம்!

—எஸ். ஆர்.

நாளொன்றுக்கு ரூ. 52 கோடி!

வியட்நாம் போரில் அமெரிக்கச் செலவு

வாஷிங்டன், சன. 19—

வியட்நாம் போருக்காக இவ்வாண்டு அமெரிக்கா நாளொன்றுக்கு ரூ. 52½ கோடிக்குமேல் செலவிட நேரிடும்.

இராணுவத் துறை கோரிய தொகையில் ஐந்தில் ஒரு பகுதி வெட்டப்படடுள்ளதால் இது, சென்ற ஆண்டுச் செலவைவிடச் சற்றே அதிகமாகும்.

தென் கிழக்கு ஆசியாவில் மட்டும் வரும ஆண்டில் அமெரிக்க இராணுவச் செலவு 2,575 கோடி டாலர் (ரூ. 19,312 கோடி); எனினும், மொத்த இராணுவச் செலவு சென்ற ஆண்டைவிட 300 கோடி டாலர் அதிகம்.

கவர்னர் ஓர் திசையில்— ஆளுங்கட்சி மறு திசையில்!

புதுடில்லி நிர்வாகத்தில் வனோதம்

புதுடில்லி, சன. 20—

புதுடில்லியின் நிர்வாகத்துக்கும் —அதன் லெப்டினன்ட் கவர்னருக்குமிடையில் இருந்துவரும் பூசல், இப்போது முற்றிவிட்டது!

புதுடில்லியின் நிர்வாகமும், மாநகராட்சியும் ஜனசங்கக் கட்சியின் பொறுப்பில் இருப்பது தெரிந்ததே.

நகரில் பெட்டிக்கடை வியாபாரிகளும், நடைபாதை விற்பனையாளர்களும் முன் அனுமதியின்றி கட்டிய கட்டிடங்களையெல்லாம் இடித்து அப்புறப்படுத்துமாறு புதுடில்லி லெப்டினன்ட் கவர்னர் ஏ. என். ஜா, போலீசாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்; அதன்படி போலீசார், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் அனைத்தையும் இடித்துவிட்டனர். இதற்கு எதிர் நடவடிக்கையாக புதுடில்லி மாநகராட்சி, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மாற்று வசதிகள் செய்து கொடுத்துவிட்டது.

"நகரில் வீடிழந்து தவிப்பவர்களுக்கு மாற்று வசதி செய்து கொடுப்பது மாநகராட்சியின் கடமையாகும்" என்று புதுடில்லியின் மேயர் ஹன்ஸ் ராஜ் குப்தா தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம், நகரில் அனுமதியின்றி கட்டப்பட்ட குடியிருப்புக்கள் அனைத்தும் அகற்றப்படுவதில் லெப்டினன்ட் கவர்னர் தீவிரம் காட்டி வருகிறார்.

நிர்வாகத்துக்கும்—கவர்னருக்கும் இடையே இருந்துவரும் இந்த முரண்பாடும் பூசலும், அதிகாரிகளுக்கிடையேபெருங்குழப்பத்தை உண்டாக்கி வருகிறது.

பதவி விலகும் கவர்னரின்நற்பணி

ஏழைகள் கல்விக்கு நன்கொடை

கட்டாக், சன. 20—

ஒரிசா மாநில கவர்னர் டாக்டர் ஏ. என். கோன்லா, இந்த ஆண்டு சனவரி 26-ஆம் நாள் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். பதவியிலிருந்து விலகியதும், கல்வி மற்றும் ஆதிவாசிகளின் நலத்துக்குப் பாடுபட அவர் முடிவெடுத்திருக்கிறார்.

டாக்டர் ஏ. என். கோஸ்லா ஏழை மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் வாழ்க்கை நலத்துக்கும் பயன்படும்வகையில் ஒரிசா அரசுக்கு ரூ. 1-இலட்சத்து 40-ஆயிரம் நன்கொடை வழங்கியுள்ளார். அவர் தமது மனைவியின் பெயரால் ரூர்கேலாவில் பெண்களுக்கான ஒரு கல்லூரியையும் நிறுவியிருக்கிறார். டிட்லாகர், கோராபுட் ஆகிய ஊர்களிலும் பெண்களுக்கான கல்லூரிகள் நிறுவப்படுவதில அவர் பெரும் பங்குபற்றியவராவார்.

சாம்பல்பூருக்கு அருகே மகாரியில் இராகுட் என்ற மாபெ அணை கட்டப்படுவதற்கு டா கோஸ்லா பெருமுயற்சி எ வராவார். மாநிலத்தின் மி வளர்ச்சிக்குப் பத்து ஆண்டுத் டம் தயாரித்துக் கொடுத்தவ அவர்தான்!

'தமிழ் மொழியின் ஏற்றம் குறித்து இனி ஐயப்பாடு ஏதும் கிடையாது'

சிலப்பதிகார நாடக நூல் வெளியீட்டு விழாவில் அறிஞர் அண்ணா விளக்கம்

கருணாநிதியின் அழகு நடை—எழுத்தாற்றல் பற்றிப் புகழுரை

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் பாராட்டு

சென்னை, சன. 19—

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களால் எழுதப்பட்ட சிலப்பதிகாரக் காப்பிய நாடகம், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்த வெளியீட்டு விழா, நேற்று இரவு, அசோகா விடுதியில் உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வி.எஸ். தியாகராசனார் அளித்த விருந்தையொட்டி நடைபெற்றது.

நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமைதாங்கி நடத்திக் கொடுக்குமாறு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலனார் அவர்களை, திரு. வி எஸ். தியாகராசனார் கேட்டுக்கொண்டதை அமைச்சர் கருணாநிதி அவர்கள் அஞ்சுகம் பதிப்பகத்தின் சார்பில் வழிமொழிந்து பேசினார்.

திரு. பக்தவத்சலம் தலைமையேற்று, நூலின் சிறப்பையும் நூலாசிரியரின் அரிய பணியையும் பாராட்டிப் பேசினார்.

அடுத்து அண்ணா அவர்கள், நூலை வெளியிட்டு உரை நிகழ்த்தினார்கள்.

அமைச்சர் கருணாநிதி எழுதிய சிலப்பதிகாரக் காப்பிய நாடக நூலை, இலங்கை அமைச்சர் திருச்செல்வம் அவர்களின் துணைவியாருக்கு அண்ணா அவர்கள் வழங்கினார்கள்; அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை ஆஸ்திரேலிய தமிழறிஞர் கார்டன் என்பவரிடம் அளித்தார்கள்.

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திரு. டி.ஜி. நாராயணசாமிக்கு அண்ணா அவர்கள் கைத்தறியாடை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

விருந்தளித்த திரு. வி. எஸ். தியாகராசனார், விருந்தினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்த பின், இலங்கை திரு. ஜேம்ஸ் இரத்தினம், ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதிநிதி திரு. கார்டன், மலேசிய நாட்டுப் பிரதிநிதி திரு. காந்தன் ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

இறுதியாக, உலகத் தமிழ் மாநாட்டு அமைப்பாளர் திரு. ஏ. சுப்பையா வாழ்த்தும் நன்றியும் தெரிவித்துப் பேசினார்.

ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதிநிதி திரு. கார்டன் அண்ணாவிடம் நூலைப் பெற்றுக்கொண்டபோது, தமிழ்நாட்டவரைப்போல் வேட்டி—சட்டை—துண்டு அணிந்திருந்த காட்சி கண்டு, அனைவரும் வியப்புடன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மு. கருணாநிதி

பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்து தமிழகத்திலிருந்து வழியனுப்பி வைக்கப்படுகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படுகின்ற இந்த விருந்தில்—உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கின் பொதுச்செயலாளர் வி. எஸ். தியாகராசனார் அவர்களால் அளிக்கப்படுகிற இந்த விருந்தில்—நான் எழுதி—அருமை கண்பர் டி. ஜி. நாராயணசாமி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகார நாடகக் காப்பியத்தினை அஞ்சுகம் வெளியீட்டின் சார்பாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிடுகிறார்கள்.

இந்த விழா உள்ளபடியே மிகவும் சிறப்புடையதாக அமைகிறது என்று நான் கருதுகிறேன்; ஏனென்றால், முதலிலே விருந்து கொடுப்பவர் திருவாரூரைச் சேர்ந்தவர்; இந்தப் புத்தகத்தை அளிப்பவனும் திருவாரூரைச் சேர்ந்தவனென்கிற முறையில்—இதை வெளியிடுகின்ற விழாவுக்கு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் சலைமை தாங்குவதையும் நான் மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன்.

என்னுடைய தலைவரும் தமிழ் நாட்டு முதல்வருமான அண்ணா அவர்களும் இந்த நூலை வெளியிடுவது, அவர் எனக்குத் தந்த—தமிழெடுத்து யான் யாத்த நூலுக்கு அவர் வழங்குகின்ற வாழ்த்தாகும்."

எம். பக்தவத்சலம்

முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் பேசுகையில் விளக்கியதாவது :—

"நான் சிறு வயதிலே தமிழ்ப் படிக்கும்போதெல்லாம் ஒரு சிலர் குறைபடுவதுண்டு; அந்தக் குறை பாட்டைக் கேட்டு நான் வருந்துவதுண்டு கவலைப்படுவதுண்டு;—'தமிழ் இலக்கியத்திலே செய்யுள் தவிர வேறொன்றுமில்லை; வசனம் கிடையாது—நாடகம் கிடையாது; ஆங்கிலத்திலே இருக்கிறது; மற்ற மொழிகளிலே இருக்கின்றன' என்று பொதுவாகச் சொல்லுவார்கள்; 'இப்படித் தமிழுக்கு ஒரு குறை இருப்பதாகச் சொல்லுகிறார்களே' என்று நான் வருந்துவதுண்டு.

இனறு நாம் பெருமைப்படக் கூடிய வகையில், வேகமாகத் தமிழ் வளர்ந்து கொண்டு வருகிறது; வசன நூல்கள் பல வெளி வந்துகொண்டிருக்கின்றன.

நம்முடைய அமைச்சர்களிலே முதலமைச்சர், பொதுப் பணி அமைச்சர், மற்றும் பலர், சிறந்த வசன இலக்கியங்களை ஆக்கிக் கொண்டு வருகிறார்கள்.

'வசனத்திற்குக் குறைவில்லை; ஆனால், நாடகம் உண்டா' என்ற ஒரு குறை கூறுவதுண்டு.

ஆனால் நான் சிலப்பதிகாரத்தைப் படித்தபோது, அந்தக் குறைக்குக்கூட இடமில்லாதிருப்பதைக் கண்டேன்; 'இதுவே நாடகமாகத்தான் அமைந்திருக்கிறது' என்பதையும் உணர்ந்தேன்; ஆனால் அசல் நாடகமாக அமையவில்லை.

திரு. பம்மல் சம்பந்தனார் அவர்கள்தான் ஏராளமான நாடகங்களைத் தமிழில் ஆக்கினார்கள். அதற்கு மேல் பல ஆசிரியர்கள் முன்வந்து பல நாடகங்கள் ஆக்கியிருக்கின்றார்கள்.

சினிமாத் தொழில் வளர ஆரம்பித்ததும், ஏராளமான நாடகங்கள்—வசனங்களெல்லாம் சீரிய முறையிலே வந்துகொண்டிருக்கின்றன.

சிலப்பதிகாரமே ஒரு நாடக வகையிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை நான் உணர்ந்தேனென்றாலும், அசல் நாடகமாக அது வரவில்லை; அந்தப் பணியைத்தான் ஆற்றல் மிகுந்த பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அவர்கள் இன்று செய்திருக்கிறார். ஆங்கிலத்திலும் இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பல்லாண்டுகளுக்கு முன்பு நம்முடைய பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு பேராசிரியர் சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்திலே செய்யுள் ரூபமாக ஆக்கியிருந்தார்; அதுவே ஒரு சிறந்த பணி; ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் தெரியாதவர்களாதலால், அவர்களும் இந்தச் சிலப்பதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் தான் அவ்வாறு ஆக்கப்பட்டிருந்தது.

அதேமாதிரி, கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆக்கிய இந்த நாடகத்தை திரு. நாராயணசாமி அவர்கள் ஆங்கிலத்தில் ஆக்கியிருக்கிறார்; அதையும் நான் வரவேற்கிறேன்; வெளிநாடுகளிலிருந்து வந்திருப்பவர்களும் வரவேற்பார்களென்றே நான் நம்புகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டுக்கே ஒரு மகுடம் சூட்டுவதுபோல் இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது."

அறிஞர் அண்ணா

"தமிழ் மொழியின் மாண்பைப் பற்றி நாம் மட்டுமல்ல—அனைத்து நாட்டு அறிஞர்களும் இங்கு வந்து எடுத்துரைத்திருக்கிறார்கள்.

"எத்தகைய ஏற்றமிகு தமிழ் மொழிக்கு நாம் சொந்தக்காரர்கள் என்ற பெருமித உணர்ச்சி நமக்கு இயற்கையாக வரத்தான் செய்யும்.

"அந்த மொழியின் ஏற்றத்திற்கு ஏற்ற அளவில் நாம் ஏற்றம் பெற்றிருக்கிறோமா என்பதுதான் ஐயப்பாடே தவிர, அந்த மொழியினுடைய ஏற்றம் குறித்து ஐயப்பாடு கிடையாது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நூலை வெளியிட்டுப் பேசுகையில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்கள். அவர் மேலும் கூறியதாவது :—

"செய்யுள் வடிவமாக இருக்கும் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக ஆக்கிய பிறகு அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது—அதிலும் செய்யுள் உருவில் தருவது என்பது கடினமானது! ஆனால், அச்சுவை கெடாமலும் பயன்மிகுந்தும் காணப்படுகிற அளவில் ஆங்கிலத்தில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

'சொன்னதைச்செய்வோம்—செய்ததைச் சொல்வோம்'

—எம். ஜி. ஆர்.

'தொகுதிக்கு ஒரு எம். ஜி. ஆர். இல்லையே'

—அமைச்சர் முத்துசாமி

'கொடையுள்ளம் பெற்றிருப்பதாலேயே குண்டு பாய்ந்தும் நம்மோடு இருக்கிறார்'

—அமைச்சர் கருணாநிதி

பறங்கிமலைத் தொகுதியின் தென்கோடியில் உள்ள கிராமமான ஒட்டியம்பாக்கத்தில், ரூ. 75 ஆயிரம் செலவில் கட்டப்படவிருக்கும் இணைப்புப் பாலத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்; இந்த அடிக்கல் நாட்டு விழா தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடந்தது.

இவ்விழாவில் பொதுப் பணித்துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், உள்ளாட்சித்துறை யமைச்சர் திரு. மா. முதது சாமி அவர்களும் கலந்துகொண்டனர்.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் இந்தக் கிராமத்திற்கு அமைச்சர்கள் வந்தது இதுவே முதல் தடவையாகும்.

ஆற்றைக் கடந்து செல்ல ஓர் இணைப்புப் பாலம் இல்லாததால் இந்தக் கிராமம் வெளித் தொடர்பின்றி ஒரு தீவுபோல் காட்சியளித்துக் கொண்டிருந்தது; இதனையுணர்ந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், பாலம் கட்டுவதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டதுடன், தாமும் ரூ. 15,000 இதற்கென வழங்கினார்.

எம்.ஜி.ஆர். தலைமை உரை

திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பொதுத் தேர்தலின் போது நான் ஒட்டியம்பாக்கத்திற்கு வந்தேன்; அப்போது நான் எப்படி வரவேற்கப்பட்டேன்; ஆற்றைக் கடக்க நான் மாட்டு வண்டியில் வந்தேன்; ஆற்றைக் கடக்கத் தாய்மார்கள் எவ்வளவு தொல்லைப்படுகிறார்—துயரப்படுகிறார்கள் என்பதைப் பார்த்தேன்; அப்போதே இந்தக் கிராமத்திற்குப் பாலம் அவசியம் என்பதை உணர்ந்தேன்; கிராம மக்கள் என்னிடம், 'பாலம் கட்டவேண்டும்' என்றனர்; 'நான் தேர்தலில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும் பாலம் கட்ட ஏற்பாடு செய்வேன்' என்று கூறினேன்; '20 ஆண்டுகளாகக் கேட்கிறோம்; இப்படித்தான் எல்லாரும் சொல்லிவிட்டுப் போகிறார்கள்' என்று ஒரு பெரியவர் கூறினார். அதே பெரியவர்தான் இன்று எங்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

தி. மு. கழகம், 'சொன்னதைச் செய்யும்—செய்வதைச் சொல்லும்' என்பதற்கு இந்த விழாவே சான்றாகும்; நாங்கள் சொன்னால், எங்கள் சக்திக்குட்பட்ட வகையில் இன்றில்லாவிட்டாலும் நாளை—செய்தே தீருவோம் என்பதற்கு ஆதாரமாக இங்கே முதலமைச்சர் அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள்.

தங்கள் கடமையை நிறைவேற்ற எந்தத் தொல்லையையும் ஏற்றுக் கொள்ளத் தயாரர்க இருப்பவர்கள்தான் தி. மு. கழகத்தினர்; அரசியலில் இருந்தாலும்—சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் இருந்தாலும்—அல்லது வேறு துறையில் இருந்தாலும், எங்கள் உள்ளத்தை எண்ணத்தைக் கட்டுக்கோப்பாக அமைத்துக் கொண்டு மக்களுக்குப் பணி செய்வோம்.

ஏதோ, தேர்தல்நேரத்தில் ஓட்டுக்காக வாக்குறுதி கொடுப்பவர்கள் அல்லர் நாங்கள்; அதற்கு இந்த இணைப்புப் பால அடிக்கல் நாட்டுவிழாவே சான்றாகும்; இதுதான் நாங்கள்—இதுதான் தி.மு.க."

அமைச்சர் முத்துசாமி

உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"20 ஆண்டுக்காலமாக இந்தப் பாலத்துக் கோரிக்கையை எழுப்பிக்கொண்டே இருந்ததாக ஊராட்சி மன்றத் தலைவர் கூறினார்; இந்தக் கோரிக்கை இப்போது நிறைவேறுகிறதென்றால், ஏழைகள்—கிராம மக்களின் முன்னேற்றத்தில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை அறிந்துகொள்ளலாம்.

இந்தத் தொகுதிக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், கொடுக்கும் பண்பினர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சட்டமன்ற உறுப்பினராகக் கொண்டிருப்பதுதான்! பாலம் கட்ட 15 ஆயிரம் ரூபாய் அவர் தந்திருக்கிறார்; இப்படித் தொகுதிக்கு ஒரு எம்.ஜி.ஆர். கிடைத்தால், அரசின் தொல்லை ஓரளவு குறைவாக இருக்கும்; என் தொகுதிக்குக்கூட இத்தகைய வாய்ப்புக் கிட்டவில்லை.

ஒட்டியம்பாக்கம் கிராம மக்கள் தொகை ஏறத்தாழ ஆயிரம் பேர்; ஆயிரம் பேருக்காக—கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எம்.ஜி.ஆர். பாலம் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்; அரசும் 60 ஆயிரம் ரூபாய் அளிக்கிறது; அதாவது, அரசு ஆளுக்கு ரூ. 60 வீதம் இந்தப் பாலத்திற்கு மட்டும் கொடுத்திருக்கிறது."

அமைச்சர் கருணாநிதி

அடுத்து, பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், மக்கள் கொடுத்த கோரிக்கை மனுவை ஏற்றுக்கொண்டு உரையாற்றினார்; அவர், தம் உரையில் குறிப்பிட்டதாவது :—

"இங்கே வந்த அமைச்சர்களுக்கெல்லாம் வெறும் வரவேற்பு அளித்தார்கள்; ஆனால் எனக்கு மட்டும் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.

பாலம் கட்டி முடித்தவுடன் பஸ்விட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்; பாலத் திறப்பு விழா எப்பொழுது நடைபெறுகிறதோ அப்பொழுதே அரசுப் பேருந்தும் ஒட்டியம்பாக்கம் நோக்கி ஓடிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தொகுதிக்கு ஒரு எம். ஜி. ஆர். கிடைக்கவில்லையே' என்று அமைச்சர் முத்துசாமி குறிப்பிட்டார். எம். ஜி. ஆர். இந்தத் தொகுதி மக்களின் பிரதிநிதி மட்டுமல்ல—எங்கே மக்கள் தொல்லைப்படுகிறார்களோ—எங்கே மக்கள் மழையால் வெள்ளத்தால், தீ விபத்தால், பூகம்பத்தால் தொல்லைப்படுகிறார்களோ—அப்படித் துயரப்படுபவர்களுக்கெல்லாம் அவர் பிரதிநிதி! பம்பாயில் பூகம்பம் ஏற்பட்டால் இங்கே எம். ஜி. ஆரின் இதயம் நோகிறது—15 ஆயிரம் ரூபாயை அள்ளிக் கொடுக்கிறார்!

ஆற்றில் வெள்ளம் வரும்போது இந்தக் கிராமத்து மக்கள் எப்படித் தனித் தீவில் தவிப்பது போலத்தவிக்கிறார்கள்என்பதை அறிந்து வருந்தித்தான், இணைப்புப் பாலம் கட்ட 15 ஆயிரம் ரூபாய் அளித்திருக்கிறார்! அந்தக் கொடையுள்ளம் காரணமாகத்தான், குண்டு பாய்ந்தும் அவர் நம்மிடையே இருக்கிறார்!"

இவ்விழாத் தொடக்கத்தில், முனு ஆதி வரவேற்புரை நிகழ்த்த—ஊராட்சி மன்றத் தலைவர் பால கிருஷ்ணன் அமைச்சர்களுக்கு வரவேற்பிதழ் படித்தளித்தார்.

'நவசக்தி' நாளிதழ் மீதான வழக்கு

அரசுத் தரப்புச் சாட்சிகள் குறுக்கு விசாரணை

சென்னை, சன. 20—

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களைப் பற்றி அவதூறான கட்டுரை வெளியிட்ட 'நவசக்தி' என்னும் நாளிதழ்மீது தொடரப்பட்டுள்ள வழக்கு, நேற்று செஷன்ஸ் நீதி மன்றத் தலைமை நீதிபதி முள்ளிலையில் விசாரணைக்கு வந்தது.

அரசுத் தரப்புச் சாட்சிகளான எஸ். வி. வேலு, நீலநாராயணன், இரா. சாம்பசிவம், கன்னியப்பன், மன்னை நாராயணசாமி ஆகியோரை, எதிரித் தரப்பு வழக்கறிஞர் வி. பி. இராமன் குறுக்கு விசாரணை செய்தார்; விசாரணை விவரம் வருமாறு :—

எஸ். வி. வேலு

கேள்வி :—தாங்கள் இந்தப் பிரசுரத்தைப் பார்த்தபிறகு, 'கட்சித் தொண்டர்' என்கிற முறையில், 'கட்சித் தலைவர் இப்படிச் செய்துவிட்டாரே' என்று கருதினீர்களா ?

பதில் :—ஆம்; 'இப்படிச் செய்துவிட்டாரே—கட்சிக்குக் களங்கமாயிற்றே' என்று எண்ணினேன்; அவர்மீதிருந்த மதிப்புப் போயிற்று.

கே :—'அப்படி நடந்திருக்கமாட்டார்; பிரசுரத்தில் தான் கோளாறு' என்று எண்ணத் தோன்றவில்லையா ?

ப :—இல்லை; 'அமைச்சர் அவ்வாறு செய்திருப்பார்' என்றே நம்பினேன்; 'செய்திருப்பதால் தானே இப்படிப் பத்திரிகையில் போட்டிருப்பார்கள்' என்று நினைத்தேன்.

கே :—முதல் எதிரி கண்ணதாசனைப்பற்றி அறிவீர்கள்; அவருக்கும் — அமைச்சர் கருணாநிதிக்கும் அரசியல் ரீதியாகப் பகை என்பதையும் அறிவீர்கள்.

ப :—ஆமாம்.

கே :—அவ்வப்போது தி. மு. க. அமைச்சர்களைப்பற்றியும், இதர கழகத் தலைவர்களைப்பற்றியும் கண்ணதாசன் பேசிவருவது தெரியுமல்லவா ?

ப :—தெரியும்.

கே :—அமைச்சரைத் தங்களுக்கு நன்றாகத் தெரியும். சொன்னவரோ, 'அமைச்சருக்கு அரசியல் ரீதியான எதிரி' என்பதையும் அறிந்திருந்தும், அந்தப் பிரசுரத்தைப் பார்த்ததும் அமைச்சர்மீது சந்தேகப்பட்டுவிட்டீர்களா ?

ப :—ஆமாம்; 'அமைச்சரான ஒருவர், மக்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்யவேண்டியவர்; இப்படிச் செய்துவிட்டாரே' என்று எண்ணினேன்.

கே :—இந்தச் செய்திக்கு மறுப்போ, விளக்கமோ, வேறு எந்தப் பத்திரிகையிலாவது பார்த்தீர்களா ?

ப :—இல்லை."

நீலநாராயணன்

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் நீலநாராயணன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது :—

கேள்வி :—ஏப்ரல் 13-ம் நாள் 'நவசக்தி'யைப் படித்தீர்களா ?

பதில் :—படித்தேன்.

கே :—படித்ததும், அமைச்சரிடம் பேசினீர்களா ? பேசியதும், நடவடிக்கை எடுக்கப்போவதாக அமைச்சர் சொன்னாரா ?

ப :—படித்தவுடன் அல்ல; ஓரிரு நாட்கள் கழித்துப் பார்த்தேன்; அமைச்சர், நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சொன்னார்.

கே :—அதன் பிறகு நான்கு மாதங்கள் கழித்து இந்த மனுவைப் போலீசாரிடம் கொடுத்தீர்களா?

ப :—ஆமாம்.

கே :—பிரசுரமானதற்குப் பிறகு நான்கு மாதத்திற்குப் பிறகு மனு கொடுத்திருக்கிறீர்களே, ஏன் ?

ப :—அமைச்சர் தெரிவித்தபடி நடவடிக்கை எடுக்கப்படுமென்று எதிர்பார்த்தேன்; எடுக்கப்படாததால், நானே மனு கொடுத்தேன்.

கே :—இந்த நான்கு மாதத்தில் எப்போதாவது அமைச்சரைச் சந்தித்து, 'ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை' என்று கேட்டீர்களா ?

ப :—இல்லை.

கே :—கழகத்துக்கும் அந்தக் கட்டுரை களங்கம் உண்டாக்குவதாக நினைத்தீர்களா ?

ப :—ஆம்.

கே :—கட்டுரையைப் படித்ததும் என்ன தோன்றியது ?

ப :—'வேண்டுமென்றே அமைச்சரின்மீது இழுக்கு கற்பிக்க எழுதப்பட்ட ஒன்று' என்று கருதினேன்.

கே :—அதைப் படித்ததும், எழுதியவர்மீதுதான் கோபம் வந்தது; அமைச்சரைப் பற்றி சந்தேகப் படவில்லையல்லவா ?

ப :—ஆமாம்.

கே :—அதேமாதிரி, மன்னை நாராயணசாமி, சாம்பசிவம், எஸ். வி. வேலு ஆகியோரும் அமைச்சர் மீது சந்தேகப்படவில்லையல்லவா ?

ப :—சந்தேகப்பட்டுத்தான் என்னைக் கேட்டார்கள்; நான், 'அந்தக் கட்டுரை வேண்டுமென்றே எழுதப்பட்டது' எனத் தெரிவித்து விளக்கம் கூறினேன்."

கன்னியப்பன்

அடுத்து கன்னியப்பன் என்பவர் கண்ணதாசன் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் :—

கே :—"தாங்கள் சாதாரணமாக எல்லாப்பத்திரிகைகளையும் படிப்பதுண்டா ?

ப :—உண்டு.

கே :—இந்தச் செய்திவந்த 'தினமணி'யைப் படித்ததாக நினைவிருக்கிறதா ?

ப :—ஆம்; நினைவிருக்கிறது.

கே :—இப்போது மீண்டும் அதைப் படித்துப் பார்த்துச் சொல்லுங்கள்.

ப :—ஆம்; இதையே அப்போது படித்தேன்.

கே :—தொப்பியைப் பற்றிய ஒப்பந்தம் எதுவும், அரசுக்கும்—வியாபாரிக்குமிடையே ஆகிவிட்டதாக இந்தச் செய்தியிலிருந்து புரிந்துகொண்டீர்களா?

ப :—இல்லை; 'உற்பத்தி செய்யத் துவங்கிவிட்டார்கள்' என்று மட்டுமே எழுதியுள்ளது.

கே :—விலையும் எழுதியுள்ளதல்லவா ?

ப :—பத்திரிகையிலே எழுதப்பட்டிருக்கிறது.

கே :—தொப்பி தயார் செய்யும் வியாபாரம் ஆரம்பமாகிவிட்டதாகத்தானே யாரும் புரிந்து கொள்வார்கள் ?

ப :—ஆமாம்.

கே :—உங்கள் தொழில், 'ஷிப்பிங் கிளியரிங்' ஏஜெண்டு; ஒரு கப்பலில் வேலை துவங்குவதற்கு முன், ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகுதானே வேலையைத் துவங்குவீர்கள் ?

ப :—ஆமாம்.

கே :—'நவசக்தி' வெளியான கட்டுரையின் கடைசியில், 'விளக்கம் தேவை' என்று இருக்கிறதா ?

ப :—ஆமாம்.

கே :—இது பற்றிய விளக்கம், வேறு பத்திரிகை எதிலும் பார்த்தீர்களா ?

ப :—இல்லை.

கே :— இந்தக் கட்டுரையைப் படித்த பிறகு தங்களுக்கு ஏற்பட்ட எண்ணம் பற்றி வேறு யாரிடமாவது இதுவரை சொல்லியிருக்கிறீர்களா ?

ப :—இல்லை.

கே :—வேறு வழங்குகளில் சாட்சி சொல்லியிருக்கிறீர்களா ?

ப :—இல்லை.

கே :—இன்ஸ்பெக்டர் செல்லையாவைத் தெரியுமா ?

ப :—விசாரிக்க வந்தபோது பார்த்தேன்; அவ்வளவுதான்.

கே :—தாங்களோ, ஒருவரிடமும் இதுபற்றி யாரிடமும் சொல்லவில்லை; இருந்தும், இன்ஸ்பெக்டர் வந்தது உங்களுக்கு அதிர்ச்சியை அளிக்கவில்லையா ?

ப :—இல்லை.

கே :—நீங்களோ யாரிடமும் எதுவும் சொல்லவில்லை: ஆனால், இன்ஸ்பெக்டர் உங்களை மட்டும் வந்து விசாரிப்பானேன் ?

ப :—அது அவரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி."

மன்னை நாராயணசாமி

வி. பி. இராமன் கேள்விகளுக்கு மன்னை நாராயணசாமி பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

'நவசக்தி' ஏட்டில் வெளியான செய்தியைப் படித்ததும் எனக்கு அமைச்சர் மீது சந்தேகம் உண்டாயிற்று; இதுபற்றி உடனே நான் அமைச்சரிடம் கேட்கவில்லை.

ஏற்கனவே அவர் பேரத்தை முடித்துவிட்டதாக அந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டிருந்ததால், நான், அமைச்சரிடம் ஏதும் கேட்கவில்லை; 'பின்னால் இதற்கு விளக்கம் தேவை' என்று எழுதப்பட்டு இருந்ததுபற்றி நான் கவனம் செலுத்தவில்லை.

சென்னை -- கொருக்குப்பேட்டை அண்ணா நகர் குடிசை வாழ்வோர் மன்ற 2-வது ஆண்டு விழா

சென்னை—கொருக்குப் பேட்டை அண்ணா நகர் குடிசை வாழ்வோர் மன்ற 2-வது ஆண்டு விழா—பொங்கல் விழா, 22—1—68 காலை 9 மணியளவில், தோழர் ஏ. துரை தலைமையில் நடைபெறும்; சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, கவிஞர் கா. வேழவேந்தன் பி ஏ.பி எல்., எம்.எல் ஏ., துணை மேயர் சி. பி. பவளவண்ணன், மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி., மாநகராட்சி உறுப்பினர்கள் து. வேணுகோபால், ம. மோகனரங்கம், ஆர். ஆறுமுகம், மற்றும் கே. எம். தீனதயாளன், எம். கே. பட்டாபி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நக்கீரர் கழக ஆண்டு விழா

சென்னை நக்கீரர் கழக 27-ம் ஆண்டு விழாவும், தமிழ்த் திருநாளும் 21-1-68 மாலை 6 மணிக்கு பாலர் அரங்கில் நடைபெறும்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி விழாவினைத் துவக்கிவைத்துப் பரிசுகள் வழங்குவார்; டாக்டர் சி. இலக்குவனார் தலைமையேற்பார்; திரு. அருளப்பர் அடிகள் வாழ்த்துரை வழங்குவார்; பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், 'தமிழ் கொடுத்ததும் கொண்டதும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

அன்று காலை 9-15 மணிக்கு தொழிலறிஞர் ஜி. டி. நாயுடு தலைமையில் கருத்தரங்கு நடைபெறும்; திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. கருத்தரங்கைத் துவக்கி வைப்பார்.

உளவியல், கணிதவியல், வேதியல், உயிரியல், பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளைப் பற்றி முறையே தி. இரா. அரங்கராசன், திருமதி பொன்னம்மாள், கணேச கோபாலகிருட்டினன், திருமதி அலமேலு இராமகிருட்டினன், சி. சோமநாதன், டாக்டர் சரோஜா பழனியப்பன் ஆகியோர் கருத்துரையாற்றுவர்.

பொதுக்கூட்டங்கள்

22--1--68

திருவில்லிபுத்தூர்

அண்ணா மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு வடக்கு ரத வீதியில்; தலைவர்: எஸ். டி. கொழுந்து; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., மா. குருசாமி எம்.சி., ஆர். கே. துரை நாரணன், மற்றும் பலர்.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் --- சென்னை-3

21—1—68 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு

டி. எஸ். பாலையா, எஸ். டி. சுப்புலட்சுமி, டி. வி. குமுதினி, வி. எஸ். இராகவன், ஆர். பி. சாரதி, சாரதா, சசிகலா நடிக்கும்

கற்பகம் கலாமந்திரின் 'நீரோட்டம்' (கலைமகளில் முதற் பரிசு பெற்ற நாவல்)

நாடகம் நடைபெறும்

[பி. வி. ஆர். எழுதியது]

டைரக்ஷன் : எஸ். வி. வெங்கட்ராமன்

கட்டணம் : ரூ. 3, 2, 1

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனையைக் காணத் தவறாதீர்

இன்று பொருட்காட்சி கடைசி நாள் !

காணத் தவறாதீர்கள் !

கே. கோவிந்தசாமி, எம்.சி.
அமைப்பாளர்

தமிழ் மொழியின்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் தமிழ்ப் பெருங் காப்பியங்களை நாடகங்களாக ஆக்கித் தரும் பொறுப்பை, கருணாநிதி ஏற்றுக்கொள்ள வேண்டும்—ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதில் பெருமைப்படுகிறேன்.

இப்படிப்பட்ட தமிழின் பெருமை பற்றி மாநாடுகளில் கூடிப் பேசுவதில் மட்டும் திருப்தியடையாமல் தமிழ் இலக்கியத்தின் கருத்துக்களை எல்லா மக்களும் உணரத் தக்கவிதத்தில் இனிய—எளிய நூல்களாக்கி வெளியிடுவதில் முனைந்து நிற்கவேண்டும். அந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ள கருணாநிதியை வாழ்த்துகிறேன்.

தமிழிலுள்ள காப்பியங்களும், செய்யுள் நூல்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றால், உருவத்திலேயும்—நாடக வடிவத்திலேயும்—கட்டுரை வடிவத்திலேயும் பல நூல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

அந்தவகையில், தம்பி கருணாநிதி, சிலப்பதிகாரத்தை நாடக உருவில் தந்திருக்கிறார்; தமிழ் கற்ற அனைவரும் இதனைப் பாராட்டுவார்கள். தம்பி கருணாநிதியின் சிறந்த தமிழ்நடை அனைவரும் உணர்ந்தது.

அவர் சில விஷயங்களைப்பற்றியும், சிலர் போக்கைக் கண்டித்தும் எழுதுகிற தமிழாக இருந்தால் கூட---கண்டிக்கப்பட்டவர்கள்கூட அதைப் படிக்கும்போது, 'நன்றாகத்தான் இருக்கிறது; ஆனால், நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டல்லவா எழுதியிருக்கிறார்' என்று தான் கருதிக்கொண்டிருப்பார்களே தவிர, அவரது தமிழ் நடையிலே குற்றம் கண்டிருக்கமாட்டார்கள் !

அவரது நடையில் இலக்கிய அறிவும், கலைத் திறனும் இருக்கும். அவர் இந்த நாடகக் காப்பியத்தை எழுதுவதற்கு முற்றிலும் பொருத்தமானவர்.

கருணாநிதியின் தமிழ் நூலை ஆங்கிலத்தில் நண்பர் டி. ஜி. நாராயணசாமி நல்ல முறையில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்."

'முகில்' வெளியீட்டு விழா

புலவர் இளஞ்செழியனை ஆசிரியராகக் கொண்டு திருச்சியிலிருந்து வெளிவரும் 'முகில்' என்னும் திங்களிதழின் வெளியீட்டு விழா, 21—1—68 காலை 10-மணிக்கு திருச்சி தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் திரு. அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ..எம்.பி., முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், சட்டமன்ற உறுப்பினர்களான து. ப. அழகமுத்து, எம். எஸ் மணி, ஆர். நாகசுந்தரம், மு. க. து. நடராசன், ஜே. எஸ். இராசு, மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

பாலர் அரங்கம்

சன. 21-ந் தேதி மாலை 2, 4-15 மணிக்கு

'டார்ஜானும் நியூயார்க் வீரச்செயல்களும்'

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம் :

சிறுவர்களுக்கு : 20 காசு

பெரியவர்களுக்கு : 40 காசு

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

டி. எஸ். இராமாநுசம் படத் திறப்பு விழா

தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கச் சார்பில் மறைந்த தொழிற்சங்கத் தலைவர் திரு. டி எஸ். இராமாநுசம் படத் திறப்பு விழா; 22—1—37 காலை 10 மணிக்கு சென்னை ஆனந்த் திரைப்பட அரங்கில் நடைபெறும்; பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமையில் துணைக் குடியரசுத் தலைவர் வி.வி. கிரி திரு. இராமாநுசம் படத்தைத் தைத் திறந்துவைப்பார்: செய்தித் துறையமைச்சர் சத்தியவாணி முத்து, மற்றும் டைரக்டர் கே. சுப்பிரமணியம், கே. குருமூர்த்தி, ஜி. உமாபதி ஆகியோர் சிறப்புரையாற்றுவார்.

சுயமரியாதை இயக்க 43-ம் ஆண்டு விழா

சுயமரியாதை இயக்க 43-ம் ஆண்டு விழா, 21—1—68 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்; காலை 9 மணிக்கு திரு. தி.பொ. வேதாசலனார் தலைமையில் மாநில சுயமரியாதை இயக்க மத்தியக் குழுக் கூட்டம்; 11 மணிக்கு திரு. ஆர்.கே. முனுசாமி தலைமையில், மறைந்த பகுத்தறிவு வீரர்களின் உருவப்படத் திறப்புவிழா; பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் நா. பாண்டுரங்கன் எம்.ஏ. தலைமையில் கவியரங்க மாலை 6 மணிக்கு திரு. [illegible] இலட்சுமிரதன் பாரதியார் எம். பி.எல். தலைமையில் சொல்லரங்கம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.